ECALOM
மனோகரா சந்தி,
யாழ்ப்பாணம்.
பொருளியல் - உதயன்
A/L — 1992
பகுதி II
இலங்கைப் பொருளாதாரம்
மிக விரைவில் வினா-விடை
வகுப்பு ஆரம்பம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

ECALOM
மனோகரா சந்தி,
யாழ்ப்பாணம்.
பொருளியல் - உதயன்
A/L — 1993
நெடுந்தொலைவிலிருந்து
செல், வியா. — 4மணி - 6மணி
ஆரம்பம்: 15 - 4 - 1992

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 29 சனிக்கிழமை (11-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 136

இரு பெரும் குண்டு வெடிப்புச் சம்பவங்கள்

காலை - அம்பாறையில்!

மினி பஸ் சிதறியது; 25 பேர் உயிரிழப்பு; 40 பேர் படுகாயம்; 5 பஸ்கள் தீக்கிரை!

கொழும்பு, ஏப்ரல் 11

அம்பாறை நகரின் மத்தியில் — பஸ் நிலையம் பகுதியில் — நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் மினிபஸ் ஒன்றில் நேற்றுக் காலை 9-30 மணியளவில் "டைம் - பாம்" வெடித்ததில் அந்த மினி பஸ் சிதறியது; 25 பேரின் உடல்கள் சின்னாபின்னமாகின; 40 பேர் காயமடைந்தனர்; ஐந்து பஸ்கள் தீக்கிரையாகின; நகரின் மத்தியிலிருந்த பல கடைகள் நாசமாகின.

கல்முனை — பொத்துவில் பகுதியிலிருந்து அம்பாறை ஊடாக மொனறாகலை நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸே சின்னாபின்னமாகியது. பஸ்ஸின் டீசல் தாங்கி அருகே வெடிகுண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்றும் — அந்த மினிபஸ் அம்பாறை பஸ் நிலையத்தில் இரு பஸ்களுக்கு நடுவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த

[3 ஆம் பக்கம் பார்க்க]

மாலை - மஹரகமவில்!

கார்க் குண்டுக்கு 10 பேர் பலியாகினர்; பல கட்டடங்கள், வாகனங்கள் நாசம்!

கொழும்பு, ஏப்ரல் 11

நேற்று இரண்டாவது பெரிய குண்டு வெடிப்புச் சம்பவம் இரவு 7 45 மணியளவில் கொழும்புக்கு அருகே மஹரகமவில் இடம்பெற்றது.

இந்தக் குண்டு வெடிப்பில் 10 பேர் உயிரிழந்ததாக முதலில் வெளியான செய்திகள் தெரிவித்தன.

மஹரகம சந்திக்குச் சமீபமாக — அரச மரத்துக்கு அருகே — இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றது

கார் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்தது என்றும் —

இதனால் பத்துப் பேர் உயிரிழந்தனர் என்றும்— பலர் காயமுற்றனர் என்றும் கொழும்புச் செய்திகளை மேற்கோள் காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

குண்டு வெடித்த இடத்துக்கு அருகே இருந்த பல கட்டடங்களும் வாகனங்களும் பெரும் சேதமடைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ-3-10]

கிழக்கில் இரண்டு அதிரடித் தாக்குதல்கள்!

மூதூர் - 14 படையினர் பலி!

கொழும்பு, ஏப்ரல் 11

திருகோணமலை மாவட்டம் மூதூர் பகுதியில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் 14 படையினர் உயிரிழந்தனர். அவர்களிடமிருந்து பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

மூதூர் பெரியபாலம் முகாமில் இருந்து பச்சனூர் முகாமுக்கு ரோந்து சென்ற படையினர் மீதே 64 ஆம் கட்டையில் வைத்து விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதலை நடத்தினர்.

சுமார் 12 நிமிட நேரம் மட்டுமே நீடித்த இந்தத் தாக்குதலில் 14 படையினர் உயிரிழந்தனர் என்பதை ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்களும் ஒப்புக் கொண்டன.

இந்தத் தாக்குதல் நடந்த சமயம் பள்ளிக்குடியிருப்பு, கட்டைபறிச்சான் பகுதிகளில் இருந்து 64 ஆம் வட்டையை நோக்கி — ஹெலிக்கொப்டர் ஒன்றின் உதவியுடன் — இரு இராணுவ அணிகள் முன்னேற முயன்றன. அவற்றின் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். அதனை அடுத்து அவ்வணிகள் முன்னேறும் முயற்சியைக் கைவிட்டு இழப்புகளுடன் பின்வாங்கின.

ஹெலிக்கொப்டரில் இருந்து நடத்தப்பட்ட 50 கவிய தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் பலர் காயமுற்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் 8 படையினர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர் என்றும் —

ஆறு பேர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது உயிரிழந்தனர் என்றும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. [உ-எ-10-3]

புனாணை - 6 படையினர் பலி!

கொழும்பு, ஏப்ரல் 11

மட்டக்களப்பு மாவட்டம் புனாணைப் பகுதியிலும் நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இந்தத் தாக்குதலில் ஆறு படையினர் உயிரிழந்தனர் என்பதை ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன.

மூதூர், புனாணைப் பகுதிகளில் இடம்பெற்ற இரு தாக்குதல்களிலும் நவீன ரகத் துப்பாக்கிகள் 19 உட்பட பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

புனாணை முகாமில் இருந்து தோக்கஞ் சோலை காவலரணுக்கு இரு அணிகளாகச் சென்ற — சுமார் இருபதுக்கு மேற்பட்ட — படையினர் மீதே விடுதலைப் புலிகளின் அணி அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தியது.

புனாணை முகாமில் இருந்து சுமார் ஐ நூறு யார் தூரத்தில் வைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் தப்பிய படையினர் பின்வாங்கி முகாமுக்குச் சென்றனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தின் போது விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான சாதேவன் [சிவலிங்கம் புவனேந்திரன் — மட்டக்களப்பு] வீரமரணமடைந்தார். [உ-எ-3-10]

அள்ளப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 11

கிழக்கில் நேற்று இடம்பெற்ற இரு அதிரடித் தாக்குதல்களின்போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

★ ஏ. கே. எல். எம். ஜி	— 03
★ அதற்குரிய ரவைக் கூடுகள்	— 14
★ ரி-56 ரகத் துப்பாக்கிகள்	— 09
★ அதற்குரிய ரவைக் கூடுகள்	— 36
★ ரி 81-ரகத் துப்பாக்கி	— 01
★ அதற்குரிய ரவைக் கூடுகள்	— 05
★ எஸ். எல். ஆர் ரகத் துப்பாக்கிகள்	— 06
★ அதற்குரிய ரவைக் கூடுகள்	— 11
★ தொடர் ரவைகள்	— 375
★ நடுத்தர ரவைகள்	— 800
★ நேட்டோ ரவைகள்	— 150
★ ஜே. ஆர். ரகக் கைக்குண்டுகள்	— 12

விமானத் தளத்தைப் பார்வையிட இந்திய அதிகாரிகள் திருமலை வருகின்றனர்

கொழும்பு, ஏப். 11

திருகோணமலை, சீனக்குடா விமானத்தளம் அதன் ஓடுபாதை ஆகியவற்றின் தரம் மற்றும் பாதுகாப்புக் குறித்து ஆராய்வதற்காக இந்திய அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழுவினர் இன்று சனிக்கிழமை அங்கு விஜயம் செய்கின்றனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

தமிழகத்தில் தங்கியிருக்கும் ஈழ அகதிகளை விமானம் மூலம் திருமலைக்கு அழைத்து வருவதற்கு முன்னேற்பாடாகவே இந்திய அதிகாரிகள் இங்கு வருகின்றனர் என்றும்—

இந்திய விமானங்கள் அங்கு தரையிறக்குவதற்கு ஓடுபாதை தரமானதா, பாதுகாப்பு நிலைமை எவ்வாறு இருக்கிறது போன்ற விவரங்களையும் அவர்கள் அறிந்து கொள்ள முயல்வர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா விமான நிலையத்தின் தளம் இந்திய விமானங்கள் தரையிறக்க முடியாதவாறு அளவில் சிறியதாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

அகதிகளை விமானம் மூலம் கொழும்புக்கு அழைத்து வருவது என முதலில் அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் வவுனியாவுக்கு அழைத்து வருவது என்று மாற்றம் செய்யப்பட்டிருந்தது. [ஒ-5]

தம் சக்தியை நிரூபிக்கவே புலிகள் தாக்குகின்றனர்

பி. பி. ஸி. செய்தியாளர் விமர்சனம்

கொழும்பு, ஏப். 11

விடுதலைப் புலிகள் கிழக்கில் தமக்குள்ள சக்தியை நிரூபிக்கும் வகையிலேயே நேற்றைய தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதல்கள் மூலம் கிழக்கில் தாங்கள் இன்னமும் ஒரு "கணக்கில் எடுக்கப்பட வேண்டிய சக்தி" என புலிகள் தம்மைக் காட்டிக் கொண்டுள்ளனர்.

இவ்வாறு கொழும்பிலுள்ள பி. பி. ஸி. செய்தியாளர் கிறிஸ் மொறிஸ் நேற்று ஒலிபரப்பான பேட்டி ஒன்றில் கூறினார்.

திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் நேற்று தாக்குதல்களை நடத்தியவர்கள் புலிகள்தான் என்பதில் சந்தேகமேஇல்லை. இது ஒரு நேரிடையான இராணுவ நடவடிக்கை.

அம்பாறையிலும் மஹரகமவிலும் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளுக்கு புலிகள் பொறுப்பு எனக் கூற ஆதாரம் இல்லை என்றாலும் அவர்கள் மீது சந்தேகம் ஏற்படக் இடம் உண்டு

புத்தாண்டு வேளையில் இவ்வாறான தாக்குதல்களை நடத்தி, வடக்கு. கிழக்கு தமிழர்களின் துன்பங்களை சிங்களவர் மத்தியில் உணர்த்த புலிகள் எண்ணியிருக்கலாம். — என்றார். (ஒ 10)

ஊரியான் சேவை நிறுத்தம்

இயக்கச்சி, ஏப். 11

தண்ணீர் மட்டம் மிகக் குறைந்து விட்டதால், ஊரியான் படகுச் சேவை இன்றிரவு 12 மணியுடன் மூடப்பட்டு விடும் என்று அறிவிக்கப்பட்டது.

அதை அடுத்து பயணிகளின் வசதி கருதி நாளை [ஞாயிறு] காலை 6 மணி முதல் வண்ணான் குளம் கொம்படிப்பாதைப் படகுச் சேவை நடைபெறும் என்று படகுச் சேவைப் பொறுப்பாளர் [illegible] கூறினார். (ஒ)

முச்சந்தி முரளி

"இது இம் மாதிரி எல்லோரும் பாக்க வருகினம்...?"

பாலம்பிட்டி தாக்குதலற்ற பிரதேசம்

யாழ்ப்பாணம், ஏப். 11

தமிழகத்தில் இருந்து திரும்பும் ஈழத் தமிழ் அகதிகள் தங்குவதற்காக மன்னார் மாவட்டம் பாலம்பிட்டியில் முகாம் அமைக்கும் வேலைகள் நேற்று ஆரம்பமாகின. இப்பகுதி நேற்று முதல் தாக்குதலற்ற பிரதேசமாகவும் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

மடு அகதி முகாமுக்குச் சமீபமாக அமைக்கப்படும் இந்த முகாம் ஐ. நா. அகதிகள் தூதரக மேற்பார்வையில் இயங்கும். [உ-3]

ஆவரங்கால் பகுதி நோக்கி நேற்று திடீர் ஷெல் வீச்சு!

வீடுகள் சேதம்; சிலர் காயம்

அச்சுவேலி, ஏப். 11

புலாலி முகாமில் இருந்து நேற்றுக் காலை 8 மணியளவில் ஆவரங்கால், புத்தூர் பகுதிகளை நோக்கி ஆட்டிலறி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

குடியிருப்புப் பகுதிகளை நோக்கி திடீரென நடத்தப்பட்ட தாக்குதல்களினால் மக்கள் பெரும் பீதியடைந்தனர். ஷெல்கள் விழுந்து வெடித்ததால் வீடுகள் சேதமடைந்தன. சிலர் காயமடைந்தனர்.

ஆவரங்கால் கிழக்கைச் சேர்ந்த பொன்னம்பலம் சுலோ [29 வயது], அவரது 14 வயதுடைய மகன் ஜீவதாசன் ஆகியோரும் காயமுற்றனர்.

ஆவரங்கால் 10ஆம் கட்டை ஓடை ஆகிய இடங்களிலேயே ஷெல்கள் விழுந்து வெடித்தன என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-11-15]

பிரிட்டனில் மீண்டும் கன்சர்வேட்டிவ் வெற்றி!

லண்டன், ஏப். 11

கடந்த வியாழக்கிழமை நடந்த பிரிட்டிஷ் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி மீண்டும் ஆட்சியைப் பிடித்தது.

ஆட்சி அமைப்பதற்குத் தேவையான அறுதிப் பெரும்பான்மை ஆசனங்களை கன்சர்வேட்டிவ் கட்சி பெற்றுக் கொண்டது.

1979, 1984, 1987 தேர்தல்களிலும் கன்சர்வேட்டிவ் கட்சியே வெற்றி பெற்றது.

தொடர்ச்சியாக நான்காவதுதடவையாக 1992 தேர்தலிலும் கன்சர்வேட்டிவ் கட்சி வெற்றிபெற்று பிரிட்டிஷ் அரசியலில் புதிய சாதனை ஒன்றைப் படைத்துள்ளது.

கன்சர்வேட்டிவ் கட்சி மண் கவ்வும் என்று பலரும் எதிர்பார்த்தனர். அதற்கு மாறாக நாம் பிரமாதமான வெற்றி பெற்று விட்டோம். — என்று பிரதமர் ஜோன் மேஜர் லண்டனில் உள்ள பிரதமரின் அலுவலக படியில் நின்றபடி, மகிழ்ச்சி ஆரவாரத்தின் மத்தியில் ஆதரவாளர்களிடம் கூறினார்.

கன்சர்வேட்டிவ் கட்சிக்கு 44 சதவீத வாக்குகளும் தொழிற்கட்சிக்கு 36 சதவீத வாக்குகளும் கிடைத்தன.

முன்னாள் பிரதமர் எட்

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

அல்ஷேசன் பெண் நாய் [இரண்டு வருடம்] விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ. இல்லைராசா, இல 55, 3ஆம் கட்டை, புருக்கித் துறை வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். [20425]

அன்பான் திருமண சேவை

Bh. D. பொறியியலாளர் U.S.A., Ph. D பொறியியலாளர் U.K., எலெக்ரோனிக் பொறியியலாளர் U.K., M.Sc. பொறியியலாளர் கனடா ஆகிய மணமக்களுக்கு பட்டதாரி, I.C.M.A. மணப்பெண்கள் தேவை. ஞாயிறில் தொடர்பு கொள்ளவும். விண்ணப்பம் ரூபா 50/-. சின்னச்சாமிக் குருக்கள், சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவில், நல்லூர், யாழ்ப்பாணம். [20419]

இலவச திருமண சேவை

வயது, சதயம் 3, M.B.B.S Dr.க்கு Professional தரத்தில் மணமகன் தேவை. வெளிநாட்டு விண்ணப்பங்களும் ஏற்கப்படும். சந்திப்பு ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4619]

வயது 36, ஆயிலியம் 2, சைவ போசன ஆசிரியைக்கு ஏற்ற மணமகன் தேவை. விண்ணப்பங்கள் ஏற்கப்படும். சந்திப்பு ஞாயிறு காலையில் மட்டும். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4620]

29 வயது, புரட்டாதி 2, B. Sc. Computer, கொழும்பில் பணிபுரியும் அழகிய பெண்ணுக்கு Professional தரத்தில் மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும். சந்திப்பு ஞாயிறு காலையில் து. விமலா நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம். [4622]

34 வயது, சதயம். செவ்வாய் 7, B Sc. Computer, கொழும்பு அரச சேவையில் பணிபுரிவருக்கு ஏற்ற மணமகன் தேவை, வெளிநாடும் கவனிக்கப்படும். து. விமலா நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம். [4616]

29 வயது மகம் 2, செவ்வாய் 8, அழகிய விரிவுரையாளருக்கு மணாளன் தேவை உள்ளூர் ஆஸ்திரேலியா மணமக்கள் மாத்திரம் விரும்பத்தக்கது. து. விமலா யாழ். நாச்சிமார் கோவிலடி. [4640]

புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம் விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-1825]

விற்பனையாகின்றது

ஆரம்ப விஞ்ஞான மதிப்பீட்டு பயிற்சி. சுற்றாடற் கல்வி, மதிப்பீட்டு பயிற்சி ஆண்டு 3,4,5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான ஆண்டு 5 தமிழ் மொழிப்பயிற்சி. இன்பத்தமிழ்: கட்டுரைகள், வெளியீடு: கு. வி. அச்சகம் புத்தக விற்பனை நிலையம், 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [4644]

மலிவு விற்பனை

1992 ஆம் ஆண்டுக்கான திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர், டயரிகள் மலிவு விலையில் எல்லாப் புத்தக சாலைகளிலும் விற்பனையாகின்றன. அன்பளிப்புச் செய்யும் நிறுவனங்களுக்கு விசேட கழிவுண்டு. திருக்கணிதம் சாவகச்சேரி. [சி-1755]

புத்தகம் விற்பனை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சைவ வினா-விடை முதலாம் புத்தகம் யாழ்ப்பாணம் சைவநூற் பதிப்பக வெளியீடாக வெளிவந்து விட்டது. இடைக்குமிடங்கள்: வண்ணை வைத்தீஸ்வரன் கோவில், தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவில், வில்லூன்றி பிள்ளையார் கோவில். விலை ரூபா 5/-. [2424]

A/L 92 வினாத்தாள்

A/L 92 பரீட்சைக்குத் தயாராகும் விஞ்ஞான மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். பரீட்சைப் பகுதி, Bond Institutes. 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4650]

தேவை

வைத்தியசாலையில் உதவியாளராக கடமையாற்றுவதற்கு பெண் தேவை. கடிதமூலம் நேரில் ஞாயிறு, திங்கள் தவிர, முடிவு 25-4-92. மெடிக்கல் வைத்தியசாலை, ஸ்ரேசன் றோட், சுன்னாகம். [20423]

திருமண சேவை

யாழ். இந்து, 33 வயது நிரம்பிய B. Sc. பட்டதாரி ஆசிரியருக்கு, பட்டதாரி மணமகள் விரும்பத்தக்கது. நட்சத்திரம்: மிருகசீரிடம் 4, செவ்வாய் 12, கிரகபாவம் 43/16, ABCDE விவாகப் பொருத்துனர், 20, கண்டி வீதி, சுண்டிக்குளி. [20398]

A/L வினாத்தாள்கள்

A/L 91 பரீட்சைக்குத் தயாராகும் விஞ்ஞான மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் [சி-1827]

சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் வெற்றி தருமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? உங்கள் வினாக்களுக்கு உரிய பதில் அளிக்கப்படும். ஜாதகம், குறிப்பு எழுதிப் பலன் சொல்லப்படும். கைரேகை, விவாகப் பொருத்தம், எண்சோதிடம் பார்த்துச் சொல்லப்படும். தொடர்பு: த. சிவானந்தன் பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. [20406]

மினிவான் கட்டணம் குறைப்பு

சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கான மினிவான் கட்டணம் 20 ரூபாவில் இருந்து 15 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. (இ-117)

விடுபட்ட வாசகம்

நேற்றைய உதயனில் வெளியான மரியாம்பிள்ளை செல்லத்துரையின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி விளம்பரத்தில் — அவர் வகித்த பதவியான — "இளைப்பாறிய M.S.O உத்தியோகத்தர், யாழ். தபாற்கந்தோர்" — என்ற வாசகம் தவறுதலாக விடுபட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

C. C. A.

கலை, வர்த்தக கல்லூரி,
யாழ்ப்பாணம்.

G.C.E. A/L
93 புதிய பிரிவு

பொருளியல் — திரு. உதயன்
கணக்கியல் — திரு. ஸ்ரீ
வர்த்தகம் — திரு. இரட்ணம்
அளவையியல் — திரு. சயந்தன்
இ. நாகரிகம் — திரு. ஜோதீஸ்வரன்
தமிழ் — திரு. குழந்தை
புவியியல் — திரு. வேலாயுதபிள்ளை
அரசியல் — திரு. பஞ்சாட்சரம்

ஆரம்பம்:
12-4-1992
ஞாயிறு காலை 8-00மணி
[சி/1849]

"A" LEVEL CENTRE

உயர் தராதர கல்வி நிலையம், பருத்தித்துறை வீதி, 1 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

94-ம் ஆண்டுக்கான விஞ்ஞான வகுப்புகள்
ஆரம்பம்:- **11-04-1992 (Sat)**

ஆசிரியர்:-
தாவரவியல்: சிவவிரசிங்கம் B. Sc
விலங்கியல்: தம்பிராஜா B. Sc
தூயகணிதம்
பிரயோககணிதம்: கணேசன் B. Sc
பௌதீகவியல்: ஜெயசீலன் B. Sc
இரசாயனவியல்: நாகரட்னம் B. Sc

நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும். (சி/1856)

கவனிக்கவும்

நேற்றைய உதயனில் பிரசுரமான விளம்பரத்தில் 94 ஆம் ஆண்டுக்கான விஞ்ஞான வகுப்புகள் என்பதற்குப் பதிலாக— 97 ஆம் ஆண்டுக்கான விஞ்ஞான வகுப்புகள் என்று பிழையாக அச்சாகிவிட்டது.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 13 — 03 — 1930
இறப்பு: 24 — 03 — 1991

இரத்தினசபாபதி ஜெகநாதன்
(இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளர் - A.C.C.D)
திதி 11—4—1992

அன்பர் பணி செய்தே இன்புநிலை கண்டு
கொண்டாய் — எங்கள் குலவிளக்கே!
துன்பநிலை நாம் அடைந்தோம் — எங்கள்
துயர் யார் துடைப்பார்
எங்கள் உயிர் உள்ளவரை உமை
மறவோம் திண்ணம் ஐயா!
உங்கள் அன்பை என்றும் மறவோம்
உண்மை ஐயா!

மனைவி, மக்கள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

மணியர்பதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். [20414]

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 10—05—1910
மறைவு 24-03-1991
திதி: 11—4—1992

திருமதி தங்கம்மா கனகரத்தினம்

எங்கள் இதயங்களில் அணையாத தீபமாய் சுடர்விட்டு பிரகாசித்த எமது அன்னையே! ஓராண்டு சென்றதும்மா! என்றும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது.

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

டாக்டர் செல்வி ந. கனகரத்தினம்,
சுதுமலை மேற்கு,
மானிப்பாய். [20417]

உ
ஸ்ரீ ராம ஜயம்
ஓம் வல்லிபுரேசாய நம:

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிரம்மஸ்ரீ வி. இராமச்சந்திர சர்மா
[ஆசிரியர்-ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கன்னாகம்]

ராமனாக மண்ணில்: 16—04—1940 (ஸ்ரீராம நவமி)
ராமனாக விண்ணில்: 03—04—1990 (ஸ்ரீராம நவமி)

ஆண்டு இரண்டு சென்ற போதும்
உங்கள் பிரிவுத் துயர்
ஆறவில்லையே! எமதருமை
அக்காவின் உள்ளத்திலே
ஈடு செய்ய முடியாத உங்கள்
பேரிழப்பால் பெருந் துயருறும்:

மைத்துனர்மார்-
பெரியதம்பி, சந்திரன், விசாகன்.

வல்வெட்டித்துறை,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி. [20408]

பிறந்த தின வாழ்த்து



லக்ஸ்மன்

பண்டத்தரிப்பு முல்லையடியைச் சேர்ந்த லோகநாதன் நாகேஸ்வரி தம்பதியினரின் ஏக புதல்வன் லக்ஸ்மன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று [11-04-1992] தமது இல்லத்தில் மிகவும் சிறப்பாக கொண்டாடுகிறார்.

அப்பா, அம்மா, சுட்டாஅக்கா, சாதனாஅக்கா, சோபா அக்கா, அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா, மாமன்மார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், இவரை பல்லாண்டு காலம் வாழ்க என் வாழ்த்துகிறார்கள். [20385]

NEW SCIENCE ACADEMY

93 A/L
THERMO CHEMISTRY
By
மணியம் B. Sc.

பிரிவு I Sat., Sun. — 8-00 a. m.
பிரிவு II Sat., Sun. — 3-30 p. m.
ஆரம்பம்: **11—04—1992**
[சி-1799]

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

பிரதேச மன்றங்களின் பொதுக் கூட்டங்கள்

சோரமின்மையால் ஒத்திவைக்கப்பட்ட மேற்படி பொதுக் கூட்டங்கள் 1992-05-02 ஆம் திகதி கீழே தரப்பட்டுள்ள நேர அட்டவணைப்படி சங்க மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேச மன்றம்	நேரம்
யாழ்ப்பாணம்	பிற்பகல் 2-00
நல்லூர்	பிற்பகல் 2-45
கோப்பாய்	பிற்பகல் 3-30

நிகழ்ச்சி நிரல்

1. கடவுள் வணக்கம்
2. தலைவர் உரை
3. பிரதேச மன்றக் குழு உறுப்பினர்கள் ஒன்பது-பேரைத் தெரிவு செய்தல்
4. நன்றியுரை

அங்கத்தவர்கள் அனைவரும் தவறு செய்து தவறாது வருகை தரவும்.

— தலைவர்.

09-04-1992 [சி-1796]

C. C. A.

கலை, வர்த்தகக் கல்லூரி
வெலிங்டன் சந்திக்கு அருகாமை,
யாழ்ப்பாணம்.

G. C. E. A/L
94 பிரிவு - I

பொருளியல் — திரு. உதயன்
கணக்கியல் — திரு. ஸ்ரீ
வர்த்தகம் — திரு. இரட்ணம்
அளவையியல் — திரு. சயந்தன்
இந்து நாகரிகம் — திரு. ஜோதீஸ்வரன்
தமிழ் — திரு. குழந்தை
புவியியல் — திரு. வேலாயுதபிள்ளை
அரசியல் — திரு. பஞ்சாட்சரம்

ஆரம்பம்: 12-04-1992
ஞாயிறு காலை 8 மணிக்கு

★ மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டவை.
★ முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

[சி-1852]

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 11 — 02 — 1911
மறைவு: 03 — 04 — 1990

திருமதி சிவசம்பு சொர்ணம்மா

குடும்பத்திற்கோர் ஒளிவிளக்காக வாழ்ந்து, எம்மை ஆறாத்துயரில் விட்டுச் சென்ற, உமது ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

மகள்: கு. சிவசஸ்வரி அம்மாள்,
பேரன்: கு. சிவேந்திரம்.

'சஸ்வரி வாசா',
நந்தாவில் அம்மன் கோவிலடி,
கொக்குவில் [4642]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

அறிவொளி ஏற்றுவீர்

தமிழ் மக்களின் பெரும் கருத்தனம் கல்வி என்று பெருமையுடன் கூறிக்கொள்கிறோம். குறிப்பாக வடக்கில் பெரும் செரத்தும் செல்வமும் கல்வியே என்று எழுதுகின்றோம். தமிழர்களின் மூல வளமே மூளைவளம் தான்; அதனை எந்தக் கஷ்டத்தின் மத்தியிலும் காப்பாற்றியாக வேண்டும் என்று கூட்டங்களில் முழங்குகிறோம்.

தமிழனுக்குக் கருவிலேயே கல்வி பதிந்து விடுவதால் தான். இக்கனை இன்னல்கள், புறக்கணிப்புகள், உரிமை பறிப்புகள் உரிமை மறுப்புகளுக்கும் மத்தியில் அவன் கொடர்ந்து வாழ்கிறான்; நிமிர்ந்து நிற்கிறான் என்பது உண்மையே. எழத் தமிழனின் வாழ்வும் வளமும், பலமும் பணமும் கல்வி ஒன்றே என்றால் மிகையன்று.

எனினும் எமது கல்வி நிலை எங்களை அறியாமலே கரைந்து போகிறது என்பது பலருக்கு வெளியில் தெரிவதில்லை!

தமிழர்களின் கல்வி வளத்தைச் சிதைத்து விட வேண்டும் என்பது சிங்கள அரசுகளின் — இப்போதைய அரசின் — நோக்கம். அதன் பொருட்டு தமிழர்களின் கல்வி முன்னேற்றத்தைத் தடுத்து விட அது தனது முழுச் சக்தியையும் பயன்படுத்துகிறது. நேரடியாகவும் மறைமுகமாகவும் தமிழர்களின் கல்விச் சீரழிப்பு நடவடிக்கைகளை வெகு வேகமாக — என்றுமில்லாதவாறு தீவிரமாக — செய்து வருகிறது.

இந்தச் சீரழிப்பு நடவடிக்கையின் பயனாக தமிழ்ப் பிரதேசங்களில் — ஏன் யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே — கல்வி அறிவின்மை பரவி வருகிறது. இந்த ஆபத்துக் குறித்துப் பலரும் அறியாதிருக்கிறார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் மிகமிகப் பின்தங்கிய நிலையில் உள்ளன. அங்கெல்லாம் அடிப்படை வாழ்க்கை வசதிகள் குறைவு. அந்தப் பகுதிகளின் கிராமச் சிறார்களுக்கு பாலர் கல்வி வசதியில்லை. ஏன்? பத்து பதினொரு வயது நிரம்பிய பிள்ளைகள் கூட, பாடசாலை வாசலை எட்டியும் பார்க்காதவர்களாக இருக்கிறார்கள். — என்றவாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கவலை தெரிவித்திருக்கிறார்.

இது கவலைக்குரியது மட்டுமல்ல; ஆபத்தானதும் ஆகும். தமிழர் சமுதாயம் எழுந்து நிற்கும், துணிந்து நிற்கும் கல்வி என்ற அத்திவாரத்தை அடியோடு தகர்த்து எறிந்து விடும். கல்வி அத்திவாரம் ஒரு முறை சிறிது ஆடினால் கூட தமிழர் சமுதாயம் கீழே சரிந்து விழுந்துவிடும்

கல்வி சிதைந்தால் தமிழர்களின் சக்தியும், பலமும், மதிப்பும், துணிவும், வீரமும் எல்லாமே தீர்ந்துவிடும். தமிழரின் கல்வி என்னும் உயர்பீல் அரியாமை எனபது நுண்ணுக்கு கிருமியாக — சிறிதாக — உட்புகுந்து கொண்டால் கூட அதனை அரித்து மெலியச் செய்துவிடும்; நோஞ்சான் ஆக்கிவிடும்.

ஆகவே கல்வியில்லாமை என்ற நிலைமை மிகவும் ஆபத்தானது. அது பரவாமல் உடனடியாகத் தடுக்கப்பட வேண்டியது அவசியம். இது விடயத்தில் தமிழர் சமூகம் முழுவதும் தனது கவனத்தை சிரத்தையோடு செலுத்தவேண்டும். முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

பின்தங்கிய கிராமங்களில் உள்ள சிறார்களுக்கு கல்வி அறிவூட்டவேண்டும். நெருக்கடி மிகுந்த, பிரச்சினைகள் மலிந்த இவ்வேளையில் கல்வி யறிவின்மையை விரட்டுவதையும் ஒரு சவாலாக ஏற்று முழுச்சமூகமும் ஒன்று திரண்டு செயற்படவேண்டும்.

அறியாமை இருள் தமிழர்களின் எதிர்காலச் சந்ததியினரைச் சூழ்ந்து கொள்ளாமல் அறிவொளி ஏற்றும் பெரும் பணியில் எல்லோரும் இணைந்து பங்கு கொள்ள வேண்டும்.

நாளை

யாழ்ப்பாணம், ஏப் 11

கிளிநொச்சி மாவட்ட தமிழ் தேசிய ஆசிரியர் ஒன்றியத்தின் விசேட கூட்டம் ஒன்று நாளை காலை 9மணிக்கு கிளிநொச்சி கலிஷ்ட மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் ஒன்றியத்தின் கொத்தணிப் பொறுப்பாளர்கள், பாடசாலைப் பிரதிநிதிகள், தொண்டர் ஆசிரியர்கள் ஆகியோர் பங்குபற்றுவர்.

★ ★ ★

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தில் கல்வி அபிவிருத்திக் கழக ஆசிரிய நியமனம் பெற்றோருக்கான சம்பளக் கொடுப்பனவுகள் நாளை காலை 9 மணி முதல் 11 மணி வரை பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

★ ★ ★

வறுமைக்கோட்டுக்கு கீழுள்ளோர்களுக்கான உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாதாந்த உதவிப் பணம் (தர்மப் பணம்) பெறுபவர்களுக்கான ஜனவரி, பெப்ரவரி மாத கொடுப்பனவுகள் நாளை, யாழ்ப்பாணம் 3 ஆம் குறுக்குத்தெருவில் (அடைக்கலமாதா கோவிலுக்கு அருகாமையில்) அமைந்துள்ள கிராமசேவை அலுவலர்களின் பணிமனையில் வைத்து வழங்கப்படும். [உ-167]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப் 11

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் வாராந்த கருத்தரங்கு நாளை காலை 10 மணிக்கு கோண்டாவிலிலுள்ள கழக செயலகக் கேட்போர் கூடத்தில் இடம் பெறும்.

இவ்வாரம் அமர்வில் திரு.செங்கை ஆழியான் ''எனது கலை இலக்கிய அனுபவங்கள்'' என்ற பொருளில் கருத்துரையாற்றுவார்.

(ஒ)

காலை-அம்பாறை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சமயம் — வெடிகுண்டு வெடித்தது என்றும் இலங்கை வானொலி கூறியது.

சம்பவத்தில் ஒரு பொலீஸ் அதிகாரி, ஓர் இராணுவ அதிகாரி உட்பட 25 க்கும் அதிகமானோர் உடல் சிதறிப் பலியாகினர். உயிரிழந்தவர்களில் அனேகமானோர் சிங்களவரே என்று பாதுகாப்புப் படையினர் கொழும்பில் தெரிவித்தனர்.

குண்டு வெடித்ததை அடுத்து அம்பாறைப் பகுதி எங்கும் அல்லோலகல்லோலப்பட்டது. நகரில் பல பகுதிகளிலும் உயிரிழந்தோரின் உடற் துண்டுகள், சதைகள் சிதறி, பரவிக் கிடக்கக் காணப்பட்டதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இக்குண்டு வெடிப்பினால் பஸ் நிலையப் பகுதிக்கு அருகே இருந்த பல கடைகள் பெரும் சேதமடைந்தன

உயிரிழந்தவர்களில் 15 பேரின் சடலங்களே அடையாளம் காணக்கூடிய நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

[உ-எ-3-19]

அன்னை பூபதி நினைவாக இன்று

நவாலி, ஏப். 11

தியாகச் சுடர் அன்னை பூபதி நினைவாக வலி. தென் மேற்குப் பிரதேச சமாசத்தைச் சேர்ந்த சனசமூக நிலையங்களால் நடத்தப்படும் உண்ணாவிரத நிகழ்ச்சி இன்று சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறும். [ஒ-100-30]

★ ★ ★

கடற்புலிகளின் அராலிப் பிரதேசத்திற்கான அடையாள உண்ணாவிரதமும், நினைவுக் கூட்டமும் இன்று அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் நடைபெறும். [ஒ-12]

★ ★ ★

கன்னாகம் ஐயனார் சன சமூக நிலையத்திலும் இன்று உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படும். [ஒ-89]

★ ★ ★

வண்ணார்பண்ணை, ஏப். 11

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியிலும் இன்று அடையாள உண்ணாவிரதமும் பின்னர் நினைவுக் கூட்டமும் இடம்பெறவுள்ளன.]ஒ-ரி]

யோகர் சுவாமி குருபூசை

யாழ்ப்பாணம், ஏப். 11

நாளை (ஞாயிற்றுக்கிழமை) யோகர் சுவாமிகள் குருபூசை தினமாகும்.

அதனையொட்டி யாழ்ப்பாணம் சிவத்தொண்டன் நிலையத்தில் பல்வேறு சமய நிகழ்ச்சிகள் கடந்த வியாழக்கிழமை முதல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நாளை வரை நிகழ்ச்சிகள் தொடர்ந்து இடம்பெறும். [உ-5]

★ ★ ★

யோகர் சுவாமிகள் குருபூசை விழா நாளை காலை 9 மணிக்கு கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறும்.

வித்தியாலயத்தின் இந்து மாணவர் மன்றம் ஏற்பாடு செய்துள்ள குருபூசை நிகழ்ச்சிகளின் போது சுடுட்டுப் பிராரத்தனை, நற்சிந்தனைப் பாடல்கள், பேருரைகள் ஆகியன இடம்பெறும்.

யாழ். தெற்கு கொத்தணி மட்டத்தில் நடைபெற்ற யோகர் சுவாமிகள் பற்றிய கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும் இந்நிழச்சியின் போது வழங்கப்படும்.

[உ-30]

கடந்த ஆண்டு 13 இந்தியர் சுட்டுக்குப் பலி!

புதுடில்லி, ஏப். 11

கடந்த ஆண்டில் பதின்மூன்று இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் உயிரிழந்தார்கள் என்று இந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது [இ-எ]

இன்று

மயிலணி, ஏப். 11

கன்னாகம் ஸ்கந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பும் இன்று மாலை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் சென் மேரிஸ் அணியை எதிர்த்து கன்னாகம் ஊரெழு றோயல் அணி மோதும்.

மாலை நடைபெறும் மற்றொரு கண்காட்சி ஆட்டத்தில் மாதகல் சென் தொமஸ் அணியை எதிர்த்து தெல்லிப்பளை கிறாஸ் கொப்பர்ஸ் அணி மோதவிருக்கிறது [உ-89]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 11

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் மாதந்தோறும் நடைபெறும் சனிக்கிழமைக் கருத்தரங்கு இன்று காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கவிஞர் கல்வயல் குமாரசாமி ''குழந்தைக் கவிதைகள்'' என்ற பொருளில் கருத்துரையாற்றுவார். [ஒ]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 11

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் மாதாந்த கலை நிகழ்ச்சி இன்று தென்மராட்சிப் பிரிவில் சாவகச்சேரி நகுலன் விளையாட்டு அரங்கில் நடைபெற இருக்கிறது. இந்நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் உரையாற்றவும் உள்ளனர்.

நாடகங்கள், கவியரங்கம், நவீன கூத்து போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. [ஒ]

★ ★ ★

சதாவதாவி கதிரவேற்பிள்ளையின் 85 ஆவது ஆண்டு குருபூசைத் தினத்தை ஒட்டி புலோலி மேற்கு கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள், போட்டிகள் நேற்று ஆரம்பமாகின. அவை இன்றும் தொடர்ந்து நடைபெறும்.]உ-165]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 11

கீரிமலைப் பிரதேச மட்டத்தில், தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் நடத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்புவிழா அளவெட்டி மாவீரர் கலை அரங்கில் இன்று சனிக்கிழமை மாலை 6-00 மணிக்கு நடைபெறும். [இ]

உணவு முத்திரை விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப் 11

யாழ் மாவட்டத்தில் ஏழாம் தொடர் உணவு முத்திரைகள் எதிர்வரும் புதன்கிழமை முதல் வழங்கப்படவிருக்கின்றன.

உதவி அரசாங்க அதிபர்களுக்கு இந்த முத்திரைகள் அனுப்பப்பட்டு வருவதாகவும், தெரிவிக்கப்பட்டது [உ 5

முத்தமிழ் விழா நிகழ்ச்சிகள்

முத்தமிழ் விழாவிற்கு நிதி சேகரிக்கும் பொருட்டு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம், குடாநாட்டின் பல பாகங்களிலும் நடத்தி வரும் கலை நிகழ்ச்சித் தொடரில், இவ்வாரம் வலிகாமம் பிரிவில் நிகழ்ச்சிகள் இடம்பெறும் பிரதேசங்கள் வருமாறு :

★ இன்று :- அளவெட்டி அருணோதயக் கல்லூரி.

★ நாளை :- பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

★ புதுவருடத் தினம் : சங்கானை.

★ 15 ஆம் திகதி :- ஏழாலை மகாவித்தியாலயம்.

★ 16 ஆம் திகதி:- புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி.

தினசரி 7 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். சாந்தன் குழுவினரின் போர்க்கால ராகங்கள் இன்னிசை நிகழ்வும். விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் 'சந்தனக்காடு' நாடகமும் நிகழ்ச்சிகளில் இடம் பெறும். [உ]

'அத்த' மீது வழக்கு

பிரதிப் பொலீஸ் மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொலவின் அறிக்கையைப் பிரசுரித்ததற்காக கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான ''அத்த'' மீதும் உடுகம்பொல மீதும் ஸ்ரீலங்கா அரசு வழக்குத் தாக்கல் செய்திருக்கிறது.

அரசுக்கு இழுக்கு ஏற்படுத்தும் விதத்தில் செய்தியைப் பிரசுரித்ததற்காக திரு. உடுகம்பொலவுக்கு எதிராகவும் ''அத்த'' பத்திரிகை ஆசிரியர் வணிசுந்தரவுக்கு எதிராகவும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் சட்டமா அதிபர் குற்றப்பத்திரம் தாக்கல் செய்தார். [உ-10 5]

குறைந்தளவு பணமே வந்தது

யாழ்ப்பாணம், ஏப் 11

புதுவருடத்தையொட்டி மக்கள் வங்கிக்கு மட்டுமே அப்பலி பணம் வந்துள்ளது அதுவும் குறைந்தளவே வந்திருப்பதாக அறியப்படுகிறது.

குமாரி கப்பலில் இலங்கை வங்கிக்கும் பணம் எடுத்து வரப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் பணம் வரவில்லை. கொழும்பில் இருந்து விமான மூலம் கொண்டு வரப்பட்டு இன்று பருத்துறைக்கு எடுத்து வரப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

வடபகுதி வங்கிகளுக்கும் பெருந்தொகையாகப் பணம் அனுப்பப்படுவதற்கு கொழும்பில அதிகாரிகள்பின்நிற்பதாகவும், நிபந்தனைகளை விதிப்பதாகவும் அறியப்படுகிறது [அ 3

பிரிட்டனில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர்ட் ஹீத் மீண்டும் கன்சர்வேட்டிவ் எம் பி.யாகத் தெரிவானார். 1950 ஆம் ஆண்டு முதல் இவர் எம் பி.யாக இருந்து வருகிறார்

சட்டசபைக் கூண்டுக்கு இரு பத்திரிகையாளர்கள்

பிரபல ஆங்கில வார இதழ் 'இல்லஸ்ட்டிரேட் வீக்லி' யின் ஆசிரியர் அனில் சர்க்காரையும் அந்த இதழில் முன்பு பணியாற்றிய கட்டுரையாளர் கே. பி. கனில் என்பவரையும் தமிழ் நாடு சட்டசபைக்கு அழைத்து கூண்டில் ஏற்றி தமது அதிருப்தியைத் தெரிவிப்பது என்று சட்ட சபை முடிவு செய்துள்ளது.

தமிழக சட்ட சபையையும் சபாநாயகரையும் இழிவுபடுத்தும் வகையில் கட்டுரை ஒன்றை எழுதியதற்காக இவர்கள் இருவர் மீதும் முன்கண்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சபை முதல்வர் இரா. நெடுஞ்செழியன் தமிழக சட்ட சபையில் நேற்று பிரேரணை ஒன்று கொண்டு வந்தார்.

சபை இதனை ஏற்றுக் கொண்டது.

பத்திரிகையாளர் கனில் அண்மையில் யாழ்ப்பாணம் வந்து சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-எ]

போதைவஸ்து கடத்தல்: நொரியேகா குற்றவாளி

மியாமி, ஏப் 11

போதைவஸ்துக் கடத்தல் தொடர்பான வழக்கில் பனாமா நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஜெனரல் நொரியேகா குற்றவாளியாகக் காணப்பட்டார்.

அமெரிக்காவில் மியாமியில் உள்ள நீதிமன்றம் ஒன்றில் இவர் மீதான வழக்கு கடந்த ஏழுமாதங்களாக விசாரிக்கப்பட்டு வந்தது.

போதைவஸ்து உற்பத்தி செய்தது, கடத்தல் நடத்தியது ஆகியன உட்பட பத்துக் குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டிருந்தன.

அவற்றில் எட்டுக் குற்றச்சாட்டுக்களில் ஜெனரல் நொரியேகா குற்றவாளியாகக் காணப்பட்டார்.

பனாமாவின் ஜனாதிபதியாகப் பணியாற்றிய சமயம் இவர் இக் குற்றச் சாட்டுகளைச் செய்தார் என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

தீர்ப்பு வழங்குவது எதிர்வரும் ஜூலை மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது. சட்டப்படி இவருக்கு 120 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று அரசு தரப்பினர் கோருவர் என்று தெரிவிக்கப்பட்டது.

நான்கு நாட்களாக பரிசீலனை செய்த பின்னர் ஜூரர்கள் நொரியேகாவைக் குற்றவாளியாகக் கண்டனர். அச்சமயம் நீதிமன்றத்தில் சமுகமளித்து இருந்த நொரியேகாவின் 3 புதல்விகள் அழுதனர். அவரது மனைவி தலை கவிழ்ந்தபடி இருந்தார்.

ஜெனரல் நொரியேகாவைக் கைது செய்வதற்காக அமெரிக்கா பனாமா மீது 1989 இல் படையெடுப்பு ஒன்றை நடத்தியதும் — அதனால் ஜனாதிபதி பதவியில் இருந்து துரத்தப்பட்ட அவரை பின்னர் அமெரிக்கப் படைகள் கைது செய்து மியாமிக்கு கொண்டு வந்ததும் தெரிந்தவையே.

பிரிட்டன் தேர்தல் முடிவுகள்

லண்டன், ஏப். 11

பிரிட்டிஷ் நாடாளுமன்றுக்கு நடைபெற்ற தேர்தல்களில் கட்சிகள் பெற்ற ஆசனங்கள் வருமாறு:-

★	மொத்த ஆசனங்கள்	— 651
★	கன்சர்வேட்டிவ் கட்சி	— 336
★	தொழிற்கட்சி	— 271
★	லிபரல் ஜனநாயகக் கட்சி	— 20
★	ஏனைய கட்சிகள்	— 24

இலங்கையரும் வெற்றி!

பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட இலங்கையரான நிராங்சன்டி சில்வா தேவ அத்திடியா வெற்றியீட்டியிருக்கின்றார்.

கன்சர் வேட்டிவ் கட்சியில் வெற்றி பெற்ற ஏரே ஒரு ஆசிய நாட்டவர் இவரே ஆவார்.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்துக்கு எம்.பியாகத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது இலங்கையரும் இவரே.

அதே சமயம் ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற வீரர் ஒருவர் கன்சர் வேட்டிவ் சார்பிலும் —

திரைப்படத்துறையில் ஒஸ்கார் விருது பெற்ற நடிகர் ஒருவர் தொழிற்கட்சி சார்பிலும் வெற்றியீட்டி உள்ளார்கள். (இ-எ)

கருத்துக் கணிப்புகள் பொய்யாகிவிட்டன

லண்டன் ஏப் 11

பிரிட்டிஷ் தேர்தல் முடிவு குறித்து பத்திரிகைகள், டெலிவிஷன் நிலையங்கள் மற்றும் ஸ்தாபனங்கள் எல்லாம் தேர்தலுக்கு முதல் நாள் வரை வெளியிட்டுவந்த கருத்துக் கணிப்புகள் எல்லாம் பொய்யாக்கப்பட்டுவிட்டன.

இப்படி பி. பி. சி நேற்று கூறியது.

பிரிட்டனில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காது என்றும் சிறு பான்மை அரசு அமைக்கப்படும் என்றும் கன்சர்வேட்டிவ் அரசு அமையும் என்றும் கருத்துக் கணிப்புகள் தெரிவித்திருந்தன.

தொழிற்கட்சி அரசு ஏற்படும் என்று எல்லோரும் எதிர்பார்த்திருந்த தருணத்தில் வெற்றியை தொழிற்கட்சியிடமிருந்து கன்சர்வேட்டிவ் கட்சி நிமிட்டத்தில் தான் தொழிற்கட்சி செயற்படுவதால் வெற்றி வாய்ப்பை சாதகமாகப் பயன்படுத்த தொழிற்கட்சி தவறியதற்குக் காரணம், கட்சியின் தலைவர் நீல் கின்னோக் மக்கள் அபிமானம் பெற்ற தலைவராக இல்லாதது என்று தொழிற்கட்சி வட்டாரங்கள் விளக்கின.

இதன் காரணமாக பதவி விலகும்படி நீல் கின்னோக் நிர்பந்திக்கப்படலாம் என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-எ]

தொழிற்கட்சிகளுள் பெரும் நெருக்கடி ஏற்படும் அறிகுறி

பிரிட்டிஷ் தேர்தல் முடிவைக் தொடர்ந்து தொழிற்கட்சிக்குள் உட்கட்சி நெருக்கடி ஏற்படலாம் என்றலண்டனில் தெரிவிக்கப்படுகிறது

தொழிற்கட்சியின் தலைவராக திரு. கின்னோக் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவரது தலைமையில் இரண்டாவது தடவையாக இக் கட்சி தேர்தலில் கலந்து கொண்டது

கடந்த 13 வருடங்களில் நடந்த தேர்தல்களில் எவ்வித மில்லாத வகையில் வெற்றியின் விளிம்புவரை இத் தேர்தலில் தான் தொழிற்கட்சி செல்ல நேர்ந்தது.

எப்படியானால் வெற்றி வாய்ப்பை சாதகமாகப் பயன்படுத்த தொழிற்கட்சி தவறியதற்குக் காரணம், கட்சியின் தலைவர் நீல் கின்னோக் மக்கள் அபிமானம் பெற்ற தலைவராக இல்லாதது என்று தொழிற்கட்சி வட்டாரங்கள் விளக்கின.

இதன் காரணமாக பதவி விலகும்படி நீல் கின்னோக் நிர்பந்திக்கப்படலாம் என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-எ]

எழுதுவினைஞர் பதவிக்கு தெரிவானோர்

(நேற்றைய தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ். மாவட்டத்தில் அரசாங்க அலுவலகங்களில் உள்ள எழுதுவினைஞர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முதல்தொகுதியாக 304 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். முதல் தொகுதியிலில் தெரிவானோரில் ஒரு பகுதியினரின் பெயர் விவரங்கள் நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தன. மிகுதி பகுதியினரின் பெயர் விவரங்கள் கீழே பிரசுரமாகி உள்ளன.

ஆர். சிவனேஸ்வரன் [3542], கே. காந்தரூபி [3591], வி. எல். அல்பிரட் [4044], ஜி. காந்திமதி [1055], ரி. புஷ்பராணி [1232], ஆர். சுகர்னன் [1310].

கே. தமிழ்ச்செல்வி [1345], ரி. திருஞானதேவன் [1531], எஸ் பவானி. [1538], எஸ் மகேஸ்வரி [1677], எஸ். யாழினி [1681], ரி. சுதாகரன் [1682], ஜி. சியாமளா [1747], ரி. முகுந்தன் [1890], ஐ மரியதாசன் [1999], கே. நந்தகுமார் [2099].

என். புனிதாம்பிகை [2383], கே. ரஞ்சிதமலர் [2216], ஆர். உமாசங்கர் [2281], ரி. அருளானந்தம் [2362], ஆர். ஜெயந்திமாலா [2451], எம். எம் ஜ. ஜேம்ஸ் [2777], ஆர். கந்தசாமி [2785], கே. சித்திராதேவி [2792], கே. புனிதவித்தகன் [2966], ரி. தவராஜனி [3021].

ஆர். வானதி [3627], ரி. முருகதாசன் [3854], ஏ. பாஸ்கரன் [1019], கே. ராஜ்குமார் [1143], கே. ரவிகுமார் [1145], எஸ். ஜெனட் ஜெயந்தினி [1236], ஏ. சிவஞானசுதி [1428], ஏ ஜெயதீஸ்வரன் [1522], எஸ். ஜே. சுரேந்திரா [1590], எஸ். யசோதரா [1605].

என். சந்தியா [1779], என். கதிரவேலு [1782], ஈ. கே. வி. [illegible] [2032], ரி. தர்மலிங்கம் [2165], எஸ். நாசலிங்கம் [2262], யு. தவராஜா [2293], ரி. சிவானந்தன் [2298] கே. சத்தியராணி [2548], வி. சுமதி [2555], எம் மங்கயற்செல்வம் [3930].

ரி. மஞ்சுளா [3131] கே விஜயரட்ணம் [3228], எஸ். செல்வநந்தி [3583], பி. மீரா [3657], எஸ். சித்திரா [1193], பி அனுஷா [1639] ரி. அமிர்தா [1694] எஸ் இலகவதி [1937], வி. யாதவராஜன் [2092], ஏ. அருளானந்தம் [2127].

என். பத்மநாதன் [2276], எம். கெங்கேஸ்வரி [2322], ஏ. உமாசங்கர் [3873] ஏ. பரமேஸ்வரி [3976] ஆர். ராஜமுகுந்தினி [1239], பி. சிறிஸ்கந்தராஜா [1292], கே. சுதர்ணதேவி [1393], ஏ. பத்மதாசன் [1585], எம். ஞானசேகரம் [1761], ஆர். சாந்தினி [1953].

ஐ கமலாம்பிகை [1979], எஸ். சுவனேஸ்வரன் [2069], ஜ. [illegible] [2233], ஜ. [illegible] [2375], [illegible] [2530], கே. ரகுநாதன் [2657], வி ரகுநாதி [2900], கே. குலராஜ சிங்கம் [3169], கே சார்லேக் வண்ணன் [3753], கே. எலிசபெத் கிருஷ்ணந்தி [3758].

எஸ். சாவித்திரிதேவி [4003], ஆர். ஜெயக்குமார் [4118], எஸ். நிர்மலாதேவி [4188], எஸ். பத்மநாதன் [1024], கே. ஜெயராஜன் [1137] ரி. புவனேந்திரன் [1302], கே. சிவகுமார் [596], வி. பத்மராணி [1777], கே. லங்கேசன் [1817], ஆர். ரமேஜேஸ்வரன் [2279].

ஆர். ராஜேஸ்கண்ணன் [2299], எம். துரைராஜா [2303], எம் ஜெயநாதன் [2429], எஸ். மேகலாதேவி [2603], ஜே தர்மலிங்கம் [2793], எஸ். யோகராஜன் [2918], என். ஜெயாஞ்சலி [2941], எஸ். மாலினி [3023], ஆர். தமிழ்மாறன் [3261], ஜே. இராசநாயகம் [3556], எஸ் சபாநாதன் [3500], பி. ஜெயஹன் [3655] பி கண்ணதாசன் [3659], எஸ். கலையரசி [4189]. [ஒ-த]

(முற்றும்)

CC-0. Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L
பிரிவு — 2 DAY CLASSES (8—3)
பிரிவு — 3 EVENING CLASSES (3—6)
பிரிவு — 2 SAT., SUN. CLASSES (8—3)

ஆரம்பம்: 16-04-1992

[சி-1841]

மணமகள் தேவை

Jaffna Hindu Parents seeks for son studying in London with Visa suitable bride in London Colombo or Jaffna of medium height, good looking good natured, Studied A L, age 22 to 25 and willing to go London with Visa. Give full Particulars to

Advt No 398
C/o. Uthayan

[20431]

ஓராண்டு நினைவு வழிபாடு

இறைவன் திருக்கரமேந்திய
அமரர் யோசேப் பென்சமின்
(சின்னத்தம்பி)

பிறப்பு: 12—08—1920
இறப்பு: 07—04—1991

அன்னாரின் ஓராண்டு நிறைவையொட்டி இன்று (11-04-1992) சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு கண்டிக்குளி, புனித யோவான் ஆலயத்தில் நன்றி செலுத்தும் வழிபாடு நடைபெறும்.

● யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அன்பு மனைவி
திருமதி மாகிறேட் பென்சமின்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

52, பழைய பூங்கா வீதி,
கண்டிக்குளி.

"என் வாழ்க்கை ஓட்டம் வீணாய் போய் விடவில்லை; நான் வீணாக உழைக்கவுமில்லை என்று நிறுத்துவின் நாளில் பெருமையாடு கூறிக்கொள்வேன்" — பிலிப்பியர் 2:14.

[20421]

வல்லிபுரக் கோவிலில்

யாழ்ப்பாணம், ஏப். 11 பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர, ஆழ்வார் ஆலயத்தில் இன்று ஸ்ரீ ராம நவமி உற்சவம் நடைபெறுகிறது.

காலையில் சங்காபிஷேகம் இடம்பெறும்.

மாலையில் கம்பன் கழகத்தினரின் பட்டி மண்டபமும், ஈழ நல்லூர் அருணா இசைக் குழுவினரின் இசைத் தேனமுதமும் இடம்பெறும்.

[அ]

புலமைப் பரிசில் ஆண்டு-5 (1991)

பயிற்சிப் பரீட்சை
12-04-1992
ஞாயிறு
பிற்பகல் 1-00 மணிக்கு
இக் கல்வி நிறுவனங்களில் நடாத்தப்படும்.

Bond — யாழ்ப்பாணம்
Express — இருபாலை
Selin — சோ பாய்
Pearl — நீர்வேலி
Kugan — ஆவரங்காய்
Satha pons — வடமராட்சி
Brilliant — தென்மராட்சி
Vinyls — கன்னாகம்
Vinayahar — ஆனைக்கோட்டை
Bitsmans — மானிப்பாய்
Paarathy — சித்தங்கேணி
National — பண்டத்தரிப்பு

விபரங்களுக்கு:
BOND
யாழ்ப்பாணம்.

[சி-18241

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

A/L கலை, வர்த்தகம்

94 புதிய பிரிவு - I [காலை 8-00 மணி]
93 பிரிவு - 3 [காலை 8-00 மணி]

ஆரம்பம்: 18-04-1992

பொருளியல்	—	திரு. கலாகரன்
வர்த்தகம்	—	திரு. தேவா
கணக்கியல்	—	திரு. வன்னியசிங்கம்
அளவையியல்	—	திரு. சுப்பிரமணியம்
தமிழ்	—	திரு. குழந்தைவேல்
இந்து நாகரிகம் / இந்து சமயம்	—	திரு. காரை சுந்தரம்பிள்ளை
புவியியல்	—	திரு. குணராஜா
அரசியல்	—	திரு ஜெயசாந்தன்
வரலாறு	—	திரு. ஸ்ரீதரன்

முக்கிய குறிப்பு:
அனுமதிப்பிளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும். குறிப்பிட்ட தொகை மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

[சி-1857]

மரண அறிவித்தல்கள்

மா. நடராசா

[கன்னாகம் பட்டின சபை முன்னாள் உபதலைவர்]

கந்தரோடை மா. நடராசா 9-4-92 இல் காலமானார். இவர் விசாலாட்சியின் அன்புக் கணவரும், திருவாளர்கள் துரைராசா, தேவராசா, செல்வராசா, திருமதி மங்கையற்கரசி கந்தசாமி ஆகியோரின் சகோதரரும், வரலட்சுமி, புனிதவதி, சிறிஸ்கந்தராசா, விஜயலட்சுமி, சிறிஜெயராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், பாஸ்கர்குமார், குமாரவேல்பிள்ளை, உதயகுமார், ஜெகநாயகி ஆகியோரின் மாமனாரும், ராஜிபிரந்தா, சைலஜா, லக்ஸ்மணகுமார், லக்சுமிபிரியா, கமலவதனி, சகுந்தலா, நளினி, பாலகுமார், சிந்தியா, சோபனகுமார் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் 09-04-92 வியாழக்கிழமை மாலை கந்தரோடை சித்தியார் வளவில் நடைபெற்று, பூதவுடல் சங்கம்புலவு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சித்தியார் வளவு, மா. தேவராசா,
கந்தரோடை [20430]

திரு. சின்னத்தம்பி சின்னத்துரை

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி சின்னத்துரை [ஓய்வு பெற்ற ஆசிரியர்] 09-04-92 அன்று புங்குடுதீவில் காலமானார்.

இவர் திருமதி மங்கையர்கரசியின் அன்புக் கணவரும், திருமதி பொ. சிவநிதி, சி. சரவணபவன் [கனடா],, சி. சிவராஜா [முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம்], திருமதி பா. சிறிதேவி [லண்டன்], சி. விக்கினேஸ்வரன் [பிரான்ஸ்], திருமதி தி. திருமகள், திருமதி சி. மங்களேஸ்வரி [ஜேர்மன்], சி. சிறீராமன் [ஜேர்மன்], சி. இலக்குமணன் [சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. வை. பொன்னுத்துரை [ஓய்வு பெற்ற தபாலதிபர்], திரு. து. பாலவிவேகானந்தன் [லண்டன்], திரு. க. திருச்செல்வம் [கனிப்பொருள் கூட்டுத்தாபனம், திருகோணமலை], திரு. ஆ. கிருஸ்ணமூர்த்தி [ஜேர்மன்], திருமதிகள் ச. இந்திராணி, சி. நாகலட்சுமி, வி. நவமணி, சி. சசிகலா, இ. லலிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று [10-04-92] வெள்ளிக்கிழமை புங்குடுதீவு மணல்காட்டு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

67/3, கோவில் வீதி, தகவல்:
நல்லூர், சி. சிவராஜா
யாழ்ப்பாணம். [மகன்]
(I. C. R. C. காரியாலயத்திற்கு அருகாமை) [20429]

திருமதி டேவிட் றோசமுத்து

நாரந்தனை வடக்கு, பெரியபுலம் வீதியைச் சேர்ந்தவரும் தற்போது 59, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசித்தவருமாகிய திருமதி டேவிட் றோசமுத்து காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. டேவிட்டின் [அருளம்பலம்] அன்பு மனைவியும், ஞானப்பு [மணி], ஜோசேப்பின் [மலர்], விறிசிற்றம்மா [ஜூடா], ராஜேஸ்வரி, மரியதாசன் [சிவம் ரெக்ஸ்ரைல்ஸ், ஊர்காவற்றுறை] ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜோசப், மாகிலாமணி, அகஸ்ரின் [C. T. B, மன்னார்], ஆனந்தராஜா [அரசினர் வைத்தியசாலை, வவுனியா], பற்றிமாரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும், அன்ரன் ஜெயக்குமார் [உ. அ. அ. பணிமனை, ஊர்காவற்றுறை], யோன்சன் ராஜ்குமார் [சென். றோக் வித்தியாலயம், யாழ்ப்பாணம்], பிரேமளா, அசம்ரா, மஞ்சுளா, ஞானமலர், அன்ரன் பயஸ் [பிரதேச சபை, நாரந்தனை], றெக்ஸ் பயஸ் [கனடா], ஜோசெப் பயஸ், ரஞ்சன் பயஸ் [சிங்கப்பூர்], டோமினிக் பயஸ் ஜெயமலர், யோகமலர், ஜெயலின், வீஜினி, சுரேஸ், அன்பரசி, றெஜி, ஜெயராஜ், ஜூட், டிலோஷியா, டிலோஜன், டிலான், நிரோஷா, வதனசேகர், ஸ்ரீகாந்தினி ஆகியோரின் அன்புப் பேத்தியும், தர்மினி, விஜித்தன், மயூரன், லக்ஷி, சுஜீவன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று மாலை 4 மணியளவில் புனித. யுவானியார் ஆலயத்தில் திருப்பலிப் பூசையுடன் புனித கொஞ்சேஸ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மரியதாசன், ஜெயக்குமார்
59, புகையிரத நிலைய வீதி, அன்ரன் பயஸ்
யாழ்ப்பாணம். [20435]

நமசிவாயம் பார்வதிப்பிள்ளை

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது சிவகுரு வீதி, கொக்குவில் மேற்கில் வசித்தவரும் ஆகிய நமசிவாயம் பார்வதிப்பிள்ளை 10-04-1992 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி புனிதவதி பசுபதிப்பிள்ளை, காலஞ்சென்ற திரு. கைலாசபதி [முன்னாள் தபால் திணைக்கள ஊழியர்], திருமதி மலர்மகள் திருஞானசம்பந்தர், திரு. செல்வந்தநாதன் (முன்னாள் மின்சார சபை கணக்குப் பரிசோதகர்] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. ஏ. பசுபதிப்பிள்ளை, திருமதி பசுவதி கைலாசபதி, திரு. இ. திருஞானசம்பந்தர், திருமதி சாந்தி செல்வந்தநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொக்குவில் மேற்கில் 11-4 1992 நண்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவகுரு வீதி, ஏ. பசுபதிப்பிள்ளை,
ஐயனார் கோவிலடி, S.N. பூபாலப்பிள்ளை
கொக்குவில் மேற்கு. (20434)

உ
சிவமயம்

★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரசோற்பத்தி வருஷம் பங்குனி மாதம் 30ஆம் திகதி [12-04-1992] ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணி தொடக்கம் ★ 2-00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில் ★

எமது திருநிறை செல்வன் **கிருபாகரன்** அவர்களுக்கும்

எமது திருநிறை செல்வி **சசி** அவர்களுக்கும்

கனடா றிச்மண்ட்ஹில் ஸ்ரீ கணேஷா ஆலய மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் நடாத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அன்றைய தினம் அச்சுவேலி தோப்பு போதி பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும் விசேட பூசையில் உறவினர், நண்பர்களை கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

★ இவ்வண்ணம் தங்கள் நல்வரவை விரும்பும் ★

திரு திருமதி சரவணபவன்,
இராஜ வீதி,
தோப்பு, அச்சுவேலி
திரு. திருமதி குணராசா.
திரு. திருமதி உருத்திரநாதன்,
(ரொறன்ரோ, கனடா).

திரு திருமதி பரஞ்சோதி குடும்பம்
(ரொறன்ரோ, கனடா)

இலவியன் தோட்டம்
கரவெட்டி.

[20427]

★ எச்சரிக்கை ★

கட்டாக்காலி நாய்களும் அவற்றால் ஏற்படும் ஆபத்துக்களும்

1. விசர்நாய்க்கடி நோயினால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிரதேசத்தில் கடந்த இரு மாதங்களில் பத்து பேர் மரணித்துள்ளனர்.
2. பல நூற்றுக் கணக்கானோர் விசர்நாய்களினால் கடியுண்டிருக்கிறார்கள். விசர் நாயினால் கடியுண்டோர் கட்டாயம் தடை மருந்து (A. R. V.) எடுத்தல் வேண்டும்
3. பனிதலில் இந்நோய் ஏற்படின் மரணம் நிச்சயம்.
4. எமது வளர்ப்பு நாய்கள் கட்டாயமாகக் கட்டி வளர்க்கப்படல் வேண்டும்.
5. இப் பயங்கர வியாதி ஆடு, மாடு, பூனை, எலி, நரி, ஓநாய், வௌவால் போன்றவற்றாலும் பரவும் ஆபத்துண்டு.
6. கட்டாக் காலி நாய்கள் இம் மிருகங்களைக் கடிப்பதன் மூலம் அவற்றிற்கு இந்நோய் பரவமுடியும். எனவே கட்டாக்காலி நாய்கள் எங்கு காணப்பட்டாலும் அழிக்கப்படல் வேண்டும்.

விசர் நாய்க்கடி நோய் கட்டுப்படுத்தும் நடவடிக்கைக் குழு,
யாழ்ப்பாணப் பிரதேசம்.

வெளியீடு:
அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்,
100 இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். 02-04-1992 [சி-17921

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 20 — 05 — 1955

மறைவு: 15 — 03 — 1989

அமரர்
முத்து மனோகரன்
(வைத்தியசாலை ஊழியர், பருத்தித்துறை)

அன்பின் உறைவிடமே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மூன்று வருடங்கள் முடிவுறுகையில், உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
பெற்றோர், சகோதரர்கள், மைத்துனர்மார், மருமக்கள், உற்றார், உறவினர்கள்.

கூவில், புலோலி தெற்கு,
புலோலி. [4632]

மரண அறிவித்தல்கள்

சதாசிவம் தம்பிராசா

யாழ்ப்பாணம், இல. 19/7, கலைப்புலவர் வீதியைச் சேர்ந்த ச. தம்பிராசா அவர்கள் காலமானார்

அன்னார் திருமதி புஸ்பத்தின் அன்புக் கணவரும், சுரேஷ்குமார் [பிரான்ஸ்], சுகுமார் [பிரான்ஸ்], திருமதி சுதாபாமினி, விஜிதா, விஜயகுமார் [பிரான்ஸ்], விஜயபாஸ்கரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், லங்கதாஸ், ரேணுகா ஆகியோரின் அன்பு மாமனாரும், திவாகரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
இல. 19/7, கலைப்புலவர் வீதி, புஸ்பம்
[பெருமாள் கோவிலடி] [மனைவி]
யாழ்ப்பாணம். (20433)

திருமதி அப்புத்துரை பூமணி

காலஞ்சென்ற சின்னத்தம்பி அப்புத்துரை [மெக்கானிக்] அவர்களின் அன்பு மனைவி பூமணி 09-04-92 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 71/3, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நாளை ஞாயிறு [12-04-92] காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகிறோம்.

71/3, புகையிரதநிலைய வீதி, தகவல்;
யாழ்ப்பாணம். மக்கள், மருமக்கள்
[20437]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்லிகேசன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11-4-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org